©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 105A]
சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 7, 2010
பங்குனி 24, திருவள்ளுவர் ஆண்டு-2041

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2010**

**1873–ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தையும் 1892–ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தையும் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

**1.** (1) இந்தச் சட்டம், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் (திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**மையச் சட்டம் III/1873**

**III/1873 எனும் எண்ணிட்ட மையச் சட்டத்திற்கான திருத்தம்.**

2. 1873–ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின் 12–ஆம் பிரிவில், முதலாம் பத்தியில், இரண்டு இடங்களில் வருகின்ற "ஐந்து இலட்ச ரூபாய்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "பத்து இலட்ச ரூபாய்" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

VII/1892 எனும் எண்ணிட்ட மையச் சட்டத்திற்கான திருத்தம்.

**3.** 1892–ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தில்,– மையச் சட்டம் VII/1892

(1) 4–ஆம் பிரிவில், (2) –ஆம் உட்பிரிவில்,–

(a) இரண்டு இடங்களில் வருகின்ற ''ஐந்து இலட்ச ரூபாய்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''பத்து இலட்ச ரூபாய்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) ''பத்து இலட்ச ரூபாய்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இருபத்தைந்து இலட்ச ரூபாய்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 15–ஆம் பிரிவில் தற்போது இருந்து வருகின்ற (2–C) எனும் உட்பிரிவானது, (2–D) எனும் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (2–D) எனும் உட்பிரிவிற்கு முன்பு பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:–

''(2–C) மேல்முறையீடுகளின் பொருட்பாட்டினைப் பொறுத்த அளவிலான தொகை அல்லது மதிப்பானது மூன்று இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத நிலையில், உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற அத்தகைய மேல்முறையீடுகள் அனைத்தும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்படுவதாதல் வேண்டும்.'';

மாறுதற்கால வகைமுறை.

**4.** (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் நிலுவையிலுள்ளதும் இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1873–ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் III/1873) வகைமுறைகளின்படி சார்நிலை நீதிமன்றத்தின் விசாரணை வரம்பிற்குட்பட்டு இருக்கிறதுமான உரிமை வழக்குகள் அனைத்தும் அந்தப் பொருட்பாட்டின் மீது அதிகாரவரம்பைக் கொண்டிருக்கின்ற சார்நிலை நீதிமன்றத்திற்கு மாற்றப்படுவதாதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஒரு கூடுதல் நீதிபதியொருவரின் அல்லது ஒரு முதன்மை நீதிபதியொருவரின் முன்பு அல்லது உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதும் இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1892–ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின் (மையச் சட்டம் VII/1892) வகைமுறைகளின்படி சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் விசாரணை வரம்பிற்குட்பட்டு இருக்கிறதுமான உரிமை வழக்குகள் அனைத்தும் அந்தப் பொருட்பாட்டின் மீது அதிகாரவரம்பைக் கொண்டிருக்கிற உதவி நீதிபதி, கூடுதல் நீதிபதி அல்லது முதன்மை நீதிபதிக்கு மாற்றப்படுவதாதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

கடந்த நான்கு ஆண்டுக் காலத்தின்போது, தமிழ்நாடு மாநிலம் மற்றும் சென்னை மாநகரம் முழுவதும் வணிக நடவடிக்கைகளிலும் வாணிகச் செயற்பாடுகளிலும் மாபெரும் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதையும் அதன் விளைவாக, அசையாச் சொத்துக்களின் மதிப்பானது பலமடங்கு உயர்ந்திருப்பதையும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்த நீதிமன்றங்களின் முதலேற்பு அதிகாரவெல்லையின் பணவகையிலான வரம்பினை உயர்த்துவதற்கு அவர் பரிந்துரை வழங்கியுள்ளார். மேலும், மேல்முறையீடுகளின் பொருட்பாட்டினைப் பொறுத்த அளவிலான தொகை அல்லது மதிப்பானது மூன்று இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத நிலையில், உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற அத்தகைய மேல் முறையீடுகள், சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்படலாம் எனவும் அவர் பரிந்துரை வழங்கியுள்ளார். அரசானது, சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளரின் மேற்சொன்ன பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டுள்ளது; மற்றும் அந்நோக்கத்திற்காக 1873—ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தையும் (மையச் சட்டம் III/1873) 1892—ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தையும் (மையச் சட்டம் VII/1892) தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

2. இச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**துரைமுருகன்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைகள் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.